# கொலோசெயர் புத்தகம் அறிமுகம்

*கிறிஸ்தவ இலக்கியங்களிலேயே கொலோசெயர் புத்தகம் மகத்தான வேலைப்பாடுகள் நிறைந்த புத்தகங்களில் ஒன்று. ஒவ்வொரு யுகத்திலும் வாழ்ந்த (வாழும்) கிறிஸ்தவர்களுக்கான மிக முக்கிய உபதேசங்களைத் தன்னகத்தே கொண்டு திருமறையின் மகத்தானக் கருத்துக்களைத் தொடுகிறது. ஒருவேளை இந்த சாராம்ஸக் கருத்துக்களின் உயர்த்தப்பட்ட இயல்பு, இயேசு தேவனுடைய தற்சுயரூபமானவர் என்பதாயிருக்கலாம். அவர் இயல்பில் தேவனாகவும், தெய்வீகத்தின் நிறைவும் பெற்றவராக சபைக்குத் தலையாக இருக்கிறார், மற்றும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவராக இருக்கிறார். இயேசுவே பரலோகத்தைக் குறித்த நமது நம்பிக்கையின் பிறப்பிடமாகவும் ஜெபத்திற்கு பதிலளிப்பார் என்கிற நமது நம்பிக்கையாகவும் இருக்கிறார். அவர் பாவத்திற்கு மன்னிப்பு அளித்து, புதிய ஜீவனையும், வாழ்க்கைக்கும், ஒழுக்கத்திற்கும், ஆவிக்குரிய காரியங்களுக்கும் வழி காட்டலுமாயிருக்கிறார்.*

*ஆரோக்கியமான குடும்ப உறவுமுறைகளுக்கு தேவனுடைய திட்டத்தை பவுல் முன் வைத்தார். கிறிஸ்துவுக்குப் பதிலாகப் பின்பற்றப்படும் மனித தத்துவங்களுக்கும் பாரம்பரியங்களுக்கும் எதிராகவும் அவர் எச்சரித்தார். அவர் கொலோசெயர் 3:23, 24ல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை நெறியைக் குறித்து ஒரு வாக்கியத்தைக் குறிப்பிட்டார்: "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்."*

*அதன் தொகுப்பின் பின்னணியில் அநேக தனி நபர்கள் இருப்பதால் அதன் அடிப்படையில் இது தனி நிருபமாகும். தீமோத்தேயு இதன் எழுத்தாளருடன் இருந்துள்ளார் (1:1), கூடவே, இன்னும் - அரிஸ்தர்க்கு, மாற்கு , யுஸ்து, எப்பாபிரா, லூக்கா, மற்றும் தேமா ஆகிய ஆறு பேர் (4:10-14) இருந்துள்ளனர் - அவர்களெல்லாரும் கொலோசெ சபைக்கு வாழ்த்துக்கள் கூறியுள்ளனர். மேலும் நிருபத்தைக் கொண்டுபோய் சேர்த்த தீகிக்கு, மற்றும் கொலோசெயிலிருந்து அவரோடே கூடப்போன அடிமையாகிய, ஒநேசிமு ஆகியோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர் (4:7-9). அர்க்கிப்புக்கு தனிச் செய்தியும் உள்ளடங்கியுள்ளது (4:17), அவர் கொலோசெயில் வாழ்ந்ததாக யூகிக்கப்படுகிறது. இவர் பிலேமோனுக்கு எழுதின நிருபமாகிய, ஒநேசிமுவின் எஜமானுக்கு எழுதிய நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளார் (பிலேமோன் 1, 2).*

## எழுத்தாளர்

*கொலோசெயர் நிருபத்தின் ஆசிரியர் பவுல்தான் என்பதற்கு உள்ளான சாட்சியமும் புறம்பான சாட்சியமும் குறிப்பிடப்படுகிறது. 1800 ஆண்டுகள்*

*வரை அவருடைய எழுத்தாக ஏற்றுக்கொள்வதில் கேள்வி யாராலும் எழுப்பப்பட்டதில்லை. பவுல் இதன் ஆசிரியர் என்பதை புறந்தள்ளுதல் 1838ல்* Ernst Theodor Mayerhoff, *எழுதிய Der Brief an die Kolosser. என்ற வெளியீட்டில் முதல் முறையாகத் தோன்றிற்று.*[1] *அப்பொழுதிலிருந்து வேறு சில எழுத்தாளர்கள் அவரது முடிவை ஏற்றுக் கொண்டனர், ஆகிலும் பெரும்பாலான வேதாகம வல்லுனர்கள் பவுலே அதன் ஆசிரியர் என ஏற்றுக் கொண்டுள்ளனர். பவுல் இதின் ஆசிரியர் என்பதற்கான மறுப்பு இப்புத்தகத்தின் எழுத்து நடை, பயன்படுத்தப்பட்டுள்ள சொற்தொகுதி, மற்றும் சில உபதேசக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்தது. இந்த நிருபம் மறைஞானி எனும் பெயர்கொண்டவர்களின் போதனைகளை இரண்டாம் நூற்றாண்டு மார்க்கத்துக்கு விரோதமாய் உபதேசித்த அவர்களை, கண்டித்து எழுதப் பட்டுள்ளது, இது பவுல் இந்த நிருபத்தை எழுதினலிருந்து மிகத் தாமதமான உபதேசம். (இந்தப் பாடத்தின் பின்பகுதியில் காணும் இப்புத்தகத்தின் "தோற்ற இடம் மற்றும் வருடம்" எனும் விவாதத்தைக் காண்க.) இப்படிப்பட்ட எந்த எதிர்ப்புகளும் பவுல்தான் அதன் ஆசிரியர் எனும் சாட்சியங்களின் பலத்தால் மேற்கொள்ளப்படும்.*

**புறம்பான சாட்சியம்**

*புறம்பான சாட்சியம் பவுல் தான் புத்தக ஆசிரியர் என வலிமையான சாதகங்களைக் கொண்டிருப்பதோடு ஆதியிலே அது ஏவப்பட்ட வசனங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளிப்படுத்துகிறது. ஹென்றி கிளாரன்ஸ் தியெசன்*[2] *இந்த சாட்சியத்தை சாராம்ஸமாக்கி:*

- *இக்னேசியஸ் (கி.பி. 110) தனது எபேசியருக்கு எழுதின நிருபம் (அதிகாரம் 10ல்) கொலோசெயர் 1:23ஐ சுட்டிக் காட்டியிருக்க வேண்டும்.*
- *பர்னபாவின் நிருபம் (அதிகாரம் 12) ஏறத்தாழ கி.பி. 130ல் எழுதப்பட்டது, கொலோசெயர் 1:16ஐச் சுட்டிக் காட்டியுள்ளதாகத் தெரிகிறது.*
- *(கி.பி. 150) ஐஸ்டின் மார்டிர் என்பவர், தனது டிரைஃபோ உரையாடலில் (அதிகாரம் 84; 85; 138 ஆகியவற்றில்) கொலோசெயர் 1:15ஐ சுட்டிக் காட்டி அதில் காணும், "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர்," எனும் வாக்கியத்தை வெளியிட்டார்.*
- *(கி.பி. 180) அந்தியோகியாவைச் சார்ந்த தியாஃப்பிலஸ் என்பவர் மத எதிர்ப்பு போதனைகளுக்கு எதிராக மேற்சொன்ன அதே வாக்கியத்தைக் குறிப்பிட்டு, "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர்" என்று ஒருமுறை ஆட்டோலிக்கஸ்க்கு (2:22) என்பதில் குறிப்பிட்டார்.*
- *(கி.பி. 180) இரேனியஸ், கொலோசெயரில், பவுல், "பிரியமான வைத்தியனாகிய லூக்கா, வாழ்த்துச் சொல்லுகிறான்" என்று எழுதினார். இதை Against Heresies என்பதில் எழுதினார் (3.14.1) இந்த வாக்கியம் கொலோசெயர் 4:14ல் காணுகிறது.*
- *அலெக்ஸாந்திரியாவைச் சார்ந்த கிலமெந்து என்பவர், கி.பி. 150-215ல் வாழ்ந்தவர், கொலோசெயர் 1:28ஐ மேற்கோள்காட்டி,*

*ஸ்ட்ரோமாட்டா* எனும் புத்தகம் 1.1ல் பவுலின் அறிக்கையாகக் குறிப்பிட்டார், மேலும் அவர் 3:12, 14, 15 ஆகிய வசனங்களை *ஸ்ட்ரோமாட்டா* 4.7 லும் 4:2-4 வசனங்களை *ஸ்ட்ரோமாட்டா* 5.10லும் குறிப்பிட்டார்.

- (கி.பி. 200) தெர்துல்லியன் கொலோசெயர் 2:8ஐ மேற்கோள் காட்டி, *Prescription Against Heretics* (அதிகாரம் 7) என்பதிலும் 2:12, 13 ஐப் பயன்படுத்தி *Resurrection of the Flesh* (அதிகாரம் 23) லும் குறிப்பிட்டார்.
- ஓரிஜன் (கி.பி. 225) வசனங்கள் 2:18, 19ஐ மேற்கோள் காட்டி, கொலோசெயர் நிருபத்தையும் குறிப்பிட்டு பவுலையும் புகழ்ந்து தனது *Against Celsus* எனும் புத்தகத்தில் (5.8) எழுதினார்.
- கொலோசெயர் புத்தகம் மார்சியான்ஸ் கிறிஸ்தவ சட்டதிட்ட தொகுதியில் பழைய இலத்தீன, மற்றும் பழைய சிரியாக்கில் சேர்க்கப்பட்டது. அது முரட்டோரியன் ஃபிரேக்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (கி.பி. 170).

நிருபம் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பில் இரண்டாவது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது, அதேபோல செஸ்டர் பீட்டி கோடெக்ஸ் (Ƥ46 என்று குறிப்பிடப்பட்டது) என்பதிலும் குறிப்பிட்டது, இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்தில் மூலதோற்றம் பெற்றது.

**உள்ளான சாட்சியம்**

உள்ளான சாட்சியமும் பவுல்தான் இதன் ஆசிரியர் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

முதலாவதாக, எழுதியவர் தன்னை பவுல் என்று 1:1ல் அடையாளப்படுத்தினார். பிற்பாடு தன்னை பவுல் என்று (1:23ல்) குறிப்பிட்டார். மேலும் நிருபத்தை முடிக்கும் போதும், "பவுலாகிய, நான், என் கையினால் எழுதி உங்களை வாழ்த்துகிறேன்" என்று எழுதினார் (4:18).

இரண்டாவதாக, கொலோசெயர் நிருபம் பிலேமோன் நிருபத்துடன் நெருங்கின தொடர்புடையதாகக் காணப்படுகிறது, இது பொதுவாக பவுலினால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எழுதியவருடன் இருந்த ஐந்து பேரை ஒரே விதமாக இரண்டு நிருபங்களிலும் வரிசைபடுத்தப்பட்டுள்ளது (கொலேசெயர் 4:10-14; பிலேமோன் 23, 24). கொலோசெயரில், அர்க்கிப்புவை நோக்கி "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக ..." என்று அறிவுறுத்தப்பட்டான் (4:17). பிலேமோனில், பவுல் அவனை "எங்கள் உடன் போர்ச்சேவகன்" என்று குறிப்பிட்டார் (வசனம் 2).

டொனால்ட் குத்ரியின் கொலோசெயர் பிலேமோன் நிருபங்களின் ஒப்பீடு பவுலினால் எழுதப்பட்டதற்கான அடையாளமாயிருக்கிறது. புறம்பான சாட்சியம் பவுலே இதன் ஆசிரியராகக் குறிப்பிடுகிறது என்று சொன்னபிறகு, அவர் எழுதினார்:

> இந்த பலமுள்ள புறம்பேயான ஆதாரங்கள் நிருபத்திற்கும்

பிலேமோனுக்கும் இடையே ஒரு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, மிதமிஞ்சி மறுக்கும் திறனாய்வாளர்களுக்கு மட்டும் அந்த அதிகாரம் சவாலாய் இருக்கிறது. இந்த நிலை தொடர்பைக் காத்துக்கொள்ள காரணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

1. இரண்டிலுமே பவுலுடன் தீமோத்தேயுவின் பெயர் ஆரம்ப வாழ்த்துரையில் இடம் பெற்றுள்ளது (கொலோசெயர் i.1; பிலேமோன் 1).

2. இரண்டு நிருபங்களிலும் அரிஸ்தர்க்கு, மாற்கு, எப்பாபிரா, லூக்கா, மற்றும் தேமா, ஆகியோர் ஏற்கனவே பவுலுடன் இருந்தவர்கள் என தெளிவாகக் காட்டி, அவர்களிடமிருந்து வாழ்த்துக்கள் சொல்லப்படுகிறது (கொலோசெயர் iv.10-14; பிலேமோன் 23, 24).

3. பிலேமோன் 2 வது வசனத்தில் அர்க்கிப்பு "உடன் போர்ச் சேவகனாக," சொல்லப்படுகிறான். கொலோசெயர் iv.17ல் அவன் தனது ஊழியத்தை நிறைவேற்றும்படி வழிகாட்டப்படுகிறான்.

4. ஒநேசிமு ... கொலோசெயர் iv.9ல் தீகிக்குவுடன் அனுப்பிவைக்கப்பட்டதையும் "உங்களில் ஒருவன்" என விவரிக்கப்பட்டதையும் காண்கிறோம்.

இந்த விவரங்களின்படி இரண்டு நிருபங்களும் இரண்டு வித்தியாசப்பட்ட நேரங்களில் அனுப்பப்பட்டன என்பது கற்பனை கூட செய்து பார்க்க இயலாததாயிருந்தது, மேலும் பிலேமோன் நிருபம் ஆதாரத்துடன் பொதுவாக எவ்வித கேள்விக்கும் இடமிராதபடி கொலோசெயர் பவுலின் உண்மையான எழுத்துப் பணி என்ற உறுதியை கொண்டு வருகிறது.[3]

மூன்றாவதாக, கலாத்தியரிலும், எபேசியரிலும் எழுதப்பட்டவைகளிலிருந்து, கொலோசெயரில் உள்ள போதனைகள் வித்தியாசமாய் இருப்பதாக சிலர் தர்க்கித்தாலும், இவைகளில் காணும் ஒற்றுமைகள் அப்படிப்பட்ட எதிர்ப்புகளை பயனற்றதாக்கி விடும்.[4] இந்தப் பாடத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் மூன்று புத்தகங்களிலுமுள்ள அநேக பொது விஷயங்களுக்கான ஒரு முன்னுதாரணம்.[5]

கொலோசெயரில் பயன்படுத்தப்பட்டுள்ள இணையற்ற சொற்பகுதிகளும் அதன் நடையில் காணும் வித்தியாசங்களும், பவுலின் செயல்பாடுகளில் மட்டுமே காணப்படும் பிரச்சனைகள் கொலோசெயரில் ஆச்சரியப்படத்தக்க வகையில் இடம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது. உதாரணமாக, எபேசியரின் தேவைகள், கொலோசெயரிடமிருந்து வித்தியாசப்பட்டவை. கர்டிஸ் வாகன் குறிப்பிடுகையில் எபேசியரிலும் கொலோசெயரிலும் வலியுறுத்துதலில் வித்தியாசம் காணப்படுகிறது என்றார்.

> ... எபேசியரில் *சபை* கிறிஸ்துவின் சரீரமாக வலியுறுத்தப்படுகிறது; கொலோசெயரில் *கிறிஸ்து* சபைக்குத் தலையாயிருக்கிறார் என்று வலியுறுத்தப்படுகிறது ... கொலோசெயர் குறிப்பாக பேசுவதில், உறுதியானது, முழுமையானது; எபேசியர் சுருக்கமான வார்த்தைகள், போதனைக் கவிதை, மற்றும் பொதுவான வார்த்தைகள் கொண்டது ... கொலோசெயர் ... ஒரு விவாதம் நிறைந்த நிருபம், "எபேசியர்" ஒரு பிரதிபலிப்பின் நிருபம்.[6]

சில வித்தியாசங்கள் காணப்பட்டாலும், கொலோசெயரில் குறிப்பிடப்படுகிற பெரும்பாலான வார்த்தைகள் வெளிப்பாடுகள் பவுலுடையதே. உள்ளான சாட்சியத்துக்கு ஆதாரம் கலாத்தியர், எபேசியர், கொலோசெயர், மற்றும் பிலேமோன் ஆகிய நான்கும் ஒரே ஆசிரியரைக் கொண்டவை.

## தோற்றத்தின் இடமும் எழுதப்பட்ட தேதியும்

பவுல் சிறையில் இருக்கும் போது கொலோசெயரை எழுதினார் (4:3, 10, 18; காண்க எபேசியர் 3:1; 4:1; 6:20; பிலிப்பியர் 1:7, 13, 14, 16; பிலேமோன் 1, 9, 10, 13). அவருடைய அதிக நாள் சிறைவைப்பு செசரியாவிலும் (நடபடிகள் 24:27) ரோமாபுரியிலும் தான் (நடபடிகள் 28:30). ஒரு சுவிசேஷ ஊழியனாக, எபேசுவில் நீண்ட நாள் செலவிட்டார் (நடபடிகள் 20:17, 31). ஆகையால், இந்த மூன்று பட்டணங்களே அடிக்கடி கொலோசெயர் நிருபம் எழுதப்பட்டதற்கான சாத்தியமான இடங்களாகப் பேசப்படுபவை.

எபேசியர் புத்தகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போர், கொலோசெயருக்கு ஒட்டி வருகிற நிருபமாயிருப்பதால், சபையைக் குறித்தும் அவர்கள் சந்திக்கிற வேறெந்த பிரச்சனைகளையும் குறித்து பவுல் சுலபமாக தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கக் கூடும். எப்பாபிரா இவைகளை பவுலுக்குப் போய்த் தெரிவிக்க மிகக் குறைவான தூரமே பயணம் பண்ணி போயிருக்க வேண்டும் (கொலொசெயர் 1:7) அதுவும் பவுல் செசரியாவிலோ அல்லது ரோமாபுரியிலோ இல்லாமல் எபேசுவில் இருந்தால் அது சமீப பயணத்தூரமாயிருந்தது. பிலேமோன் 22ல் பவுல் இருக்கும்படிக்கு ஓரிடத்தை ஆயத்தம் பண்ணக் கேட்டுக் கொள்வதால், அது பவுலுக்கு அண்மைத்தூரமாக இருந்ததைக் குறிப்பிடக்கூடும்.

எப்படியிருப்பினும், எபேசுவில் அவர் பிரயாசப்பட்டு ஊழியஞ் செய்த போது அவர் அங்கே சிறைவைக்கப்பட்டிருந்தார் என்பதற்கான ஆதாரமாக எதுவும் உறுதியாக இல்லாமையால் எபேசுவை விட்டு விடுவோம் (நடபடிகள் 20:31). அவருடைய குறிப்பின்படி தான் எபேசுவிலே “துஷ்ட மிருகங்களோடே” போராடியதாகக் கூறுவது (1 கொரிந்தியர் 15:32) அவர் சிறைவைக்கப்பட்டதற்கான ஆதாரமாகாது, மாற்கும் லூக்காவும் எபேசுவிலிருந்து வாழ்த்துக்களைச் சொல்லியிருந்தால் (கொலோசெயர் 4:10, 14), அது நடபடிகளில் சொல்லப்பட்டதுடன் ஒத்துப் போகாது, ஏனெனில் பவுல் எபேசுவில் இருந்தபோது அவர்கள் அவருடன் இருந்ததாக எதுவும் குறிப்பிடப்படவில்லை (நடபடிகள் 19). கொலோசெயர் புத்தகத்தை எழுதும்போது பவுலுடன் லூக்கா இருந்துள்ளார் (கொலோசெயர் 4:10); ஆகிலும் நடபடிகளில் “நாங்கள்” எனும் பகுதிகள் குறிப்பிடப் படாததால், அப்போஸ்தலர் நடபடிகளை எழுதின ஆசிரியராகிய லூக்கா, எபேசுவில் பவுல் இருக்கையில் கூட இருக்கவில்லை என்பதை குறிப்பால் காட்டுகிறது. அவர் பவுலுடன் ரோமாபுரிக்குப் பயணம் செய்தார் (நடபடிகள் 27:1; 28:16).

செசரியாவிலிருந்து கொலோசெயர் புத்தகத்தை பவுல் எழுதினதாக நம்புகிறவர்கள் அரிஸ்தர்க்கும் தீகிக்கும் அந்த நேரத்தில் பவுலுடன் இருந்தார்கள் என்பதற்கு அதிக சாத்தியக் கூறுகள் இருந்ததாக நினைக்கிறார்கள். பவுல் எருசலேமுக்குப் போகும்போது உடன் பயணித்தவர்களாகிய அவர்கள்

(நடபடிகள் 20:4) தொடர்ந்து அவரோடே கூடப் போய் அவரிடத்தில் தங்கியிருக்கையில் அவருக்கு பணிவிடை செய்திருக்க வேண்டும் (24:23).

எனவே கொலோசெயர் புத்தகத்தை எழுதுகிறபோது பவுல் செசரியாவில் இருக்கவில்லை என்பதும் அங்கிருந்து எழுதினார் எனும் கருத்தும் கைவிடப்படுகிறது. 1:28, 29ல், அவர் குறிப்பிடும் பிரசங்க ஊழியம் செசரியாவில் இருந்தபோது நடந்ததாக நடபடிகளில் குறிப்பிடப்படவில்லை. வீட்டுக்காவலில் அவர் ரோமாபுரியில் இருந்த இரண்டு ஆண்டுகாலம் பிரசங்கம் செய்தார் (நடபடிகள் 28:16, 30, 31). மாற்கின் பிரசன்னம் (கொலோசெயர் 4:10) பற்றி விளக்கப்படுத்துவது கடினம் ஏனெனில் செசரியாவிலிருக்கையில் நிருபம் எழுதப்பட்டிருந்தால் நடபடிகளுடன் ஒத்துப்போகாது, மாற்கு பவுலை விட்டு பர்னபாவுடன் சீப்புருவுக்குப் போய் விட்டான் (நடபடிகள் 15:39).

அநேகமாக, பவுல் ரோமில் இருக்கும் போது கொலோசெயர் புத்தகத்தை எழுதியிருக்கக்கூடும். இந்தக் கண்ணோட்டம் கி.பி. 375 ன் துவக்கத்தில் கிரைஸோஸ்டம் என்பவரால் வெளியிடப்பட்டது.[7] இது பவுலுக்கும் மாற்குக்குமிடையே ஒப்புரவாகக்கூடிய அவகாசம் அளித்தது. சிறையிலிருந்து எழுதப்பட்ட மற்றொரு நிருபம் பிலிப்பியரில், பவுல் “அரண்மனைக்காவலர்களையும்” “இராயனின் அரண்மனையிலிருந்தவர்களையும்” குறிப்பிடுகிறார் (பிலிப்பியர் 1:13; 4:22). இந்த சொல்நடை பவுல் ரோமில் இருக்கும்போது பிலிப்பியர் புத்தகத்தை எழுதினார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

நிருபத்தை எழுதும் போது பவுல் எபேசுவில் இருந்திருந்தால், எழுதப்பட்ட வருடம் தோராயமாக கி.பி. 52-54 ஆக இருந்திருக்க வேண்டும். அவர் செசரியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த போது எழுதியிருந்தால் எழுதிய வருடம் கி.பி. 57 லிருந்து 59ஆக இருந்திருக்கலாம்.[8] முடிவு செய்யப்பட்டதின்படி ரோமில் சிறைவைக்கப்பட்டிருந்தபோது எழுதியிருந்தால், எழுதிய வருடம் ஏறத்தாழ கி.பி. 60-62 ஆக இருக்கும்.

## குறிக்கோள் இலக்கு

இந்த நிருபம் கொலோசெயர் பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. “கொலோசே” என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் இரண்டு எழுத்துக் கூட்டுக்கள் உண்டு, அவை Kolossai மற்றும் Kolassai. என்பன. இவ்விரண்டு வார்த்தைகளுமே பழங்காலச் சுவடிகளிலும் புத்தகம், கல் உலோகம் ஆகியவற்றில் பொறித்து வைக்கப்பட்டதிலும் காணுகின்றன. ஒரு வகையில் முந்தின எழுத்துக் கூட்டு பழங்காலச் சொல் வடிவிலும், பிந்தின எழுத்துக்கூட்டு நிருபம் எழுதும் போது பயன்பாட்டில் இருந்தவைகளுமாகும். இதன் பெயர் கொலாசஸ் என்பதிலிருந்து வந்திருக்கலாம், அங்கே மிகுந்த கல்லின் அமைப்புடைய படிவங்கள் இருந்தமையால், ஒரு பிரமாண்டமான சிலை வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு சாத்தியமான விளக்கம் என்னவெனில் உள்ளூரில் கம்பளித்தொழில் கூடம் இருந்ததைக் கொண்டு இந்தப் பெயர் எழும்பியிருக்கலாம். அந்தக் தொழிற்கூடத்தில் உற்பத்தியாகி, சாயம் தோய்க்கப்பட்ட கம்பளிகள் கிரேக்க வார்த்தையில் colossinus என்று அழைக்கப்பட்டன, அதன் பொருள் “கருஞ்சிவப்பு வண்ணம்”[9] எனப்பட்டது.

கொலோசே பிரிகியாவிலிருந்த ஒரு பட்டணம், பெர்கமு

சாம்ராஜ்யத்தின் ஒரு மாநிலத்தில் இருந்தது. செல்வாக்கு படைத்த இரண்டு பட்டணங்கள் ஒன்றுக்கொன்று அருகில் இருந்தன: லாவோதிக்கேயா, மேற்குத் திசையில், பன்னிரண்டாவது மைலில் இருந்தது, வடமேற்கில் ஹைரோபோலி, பதிமூன்றாவது மைலில் இருந்தது. இந்த நிருபத்தை பவுல் கொலோசெயருக்கு எழுதினபோது ஒவ்வொரு பட்டணத்திலும் அங்கே கிறிஸ்தவ சமுதாயம் இருந்தது (கொலோசெயர் 2:1; 4:13-16). இந்தப்பட்டணங்களில் சுவிசேஷ ஊழியம் நடைபெறுவதற்கு முன்பே சுமார் 120 மைல்களுக்கு மேற்கில் இருந்த எபேசுவில் சுவிசேஷ ஊழியம் நடந்துள்ளது. முதல் நூற்றாண்டு வழிகளின்படி சுமார் ஓராயிரம் மைல்களுக்கு அப்பால் ரோமாபுரி இருந்தது. (பவுலின் நாட்களிலிருந்த "ரோமர் உலகம்" எனும் வரைபடத்தைக் காண்க.)

லைக்கஸ் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த, கொலோசெயில் மியாண்டர் ஆற்றின் உபநதியான லைக்கஸ் நதியின் தென் கரையில் நியாயமேடை ஒன்று இருந்தது. கொலோசே இரண்டு நதிகள் சங்கமிக்கிற இடமாகிய அருவியால் அரித்த ஒரு இடுக்குப் பாறையின் மேல் அமைந்திருந்தது. அவைகளில் ஓடிக்கொண்டிருந்த தண்ணீர் சுண்ணாம்புடன் கூடிய கரிபொருள் எனும் தனிமம் கொண்டதாக குறிப்பிடத்தக்க அளவில் அதன் கரைகளில் படிந்திருந்தது கம்பளிகளை சாயம் பிடிக்க ஏதுவாக்கிற்று. பட்டணத்துக்கு மூன்று மைல்கள் தெற்கே, 8435 அடி உயரத்தில் பட்டணத்தின் மட்டத்திலிருந்து, ஹோனஸ் டேக் (காட்மஸ் மலை) ஒரு கோபுரம் போல் காட்சியளித்தது; வடக்கே மோசினா மலைத் தொடர் இருந்தது. கி. பி. 61ல்,[10] நீரோவின் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட பூகம்பம் லவோதிக்கேயா, அநேகமாக கொலோசெ மற்றும் ஹைய்ராபோலி ஆகியபட்டணங்களை முற்றிலும் அழித்தோ அல்லது அதன் செயல்களை முடங்க செய்தோ பாதிப்புகளை ஏற்படுத்தியது. லைக்கஸ் பள்ளத்தாக்கு பூமியதிர்ச்சியாலும் எரிமலை வெடித்துச் சிதறியதாலும் பேரழிவைக் கண்டது.[11]

கிறிஸ்துவுக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன், பிரிகியா மாகாணத்தில் மிகவும் ஐஸ்வரியம் நிறைந்திருந்த பட்டணங்களில் ஒன்றாக கொலோசெ பட்டணம் விளங்கியது மற்றும் எபேசுவிலிருந்து ஐப்பிராத்து நதி செல்லும் பிரதான பாதையில் முன்னோடிப்பட்டணமாகவும் திகழ்ந்தது. இரண்டு இராணுவத்தலைவர்களான - ஜெரக்ஸ் கி.மு. 481லும், பின்னர் கி.மு. 401ல் இளைய கோரேஸூம் - அங்கே பார்வையிடப் போயிருந்த சம்பவம் மூலம் அப்பட்டணத்தின் முக்கியத்துவத்தைக் காணலாம்.

ஏரோடோடஸ் அறிக்கையிட்டபடி, பெர்சியாவின் ராஜாவாகிய ஜெரக்ஸ் (கி.மு. 485-465) தான், எஸ்தர் புத்தகத்தில் "அகாஸ்வேரு" என்று குறிப்பிடப்பட்டவர் (எஸ்தர் 1:1), பெர்சியாவிலிருந்து புறப்பட்டு கொலோசெ பட்டணத்தின் வழியாக கிரீஸ் நாட்டை படையெடுத்துத் தாக்கினார். பின்னர் ஜெனோபோஃன் (கி.மு. 401), இளையகோரேஸிற்குக் கீழ் தளபதியாக இருந்த ஒரு கிரேக்க ஜெனரல், கொலோசே பட்டணத்தில் கோரேஸ் எழுநாள் தங்கியிருக்கையில் தனது படையை சர்தையிலிருந்து நடத்திச் சென்றபோது, ஒரு கெட்ட நாளாகம நிகழ்ச்சி நேர்ந்தது. ஜெனோ போஃன் கொலோசே பட்டணத்தைக் குறிப்பிட்டு "நல்ல குடிமக்களைக் கொண்டதும் செழிப்பானதும் பெரிதுமான ஒரு பட்டணம்" என்று சொன்னான்.[12] ஹேரோடோடஸ் கொலோசெ பட்டணத்தை "பிரிகியாவின் மிகப் பெரிய

பட்டணம்” என்றார்.[13]

கொலோசே பட்டணத்தில் ஆரம்பத்தில் குடியேறினவர்கள் பிரிகியா மற்றும் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்கள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், (மகாராஜா) மூன்றாம் அந்திகஸ் மெசபொத்தோமியா மற்றும் பாபிலோனிலிருந்து இரண்டாயிரம் யூதக் குடும்பங்களை லீதியா மற்றும் பிரிகியா நாடுகளுக்கு இறக்குமதி செய்தான்.[14] J. B. Lightfoot என்பவர் லைக்கஸ் பள்ளத்தாக்கில் ஒரு பெரிய கூட்டமான யூதர்கள் வாழ்ந்ததாக மற்றொரு குறிப்பைக் கொடுத்தார், அது யூதர்களால் செலுத்தப்பட்ட தேவாலயத்து வரியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது.[15]

கி.மு. 133ஸ் அட்டலிட் அரசக்குடும்பம் பெர்கமு இராஜ்யத்தை ரோம சட்டமற்ற மேலவைக்குழுவுக்கும் ரோம பிரஜைகளுக்கும் உயில் சொத்தாக எழுதி வைத்தனர். கொலோசெ ரோமாபுரியின் மாகாணமாக மறு கட்டுமானம் பெற்றது. இதற்குப் பின்பு, இதுவும் பிரிகியாவின் பிற பட்டணங்களும் சுதந்தரமான அரசியலமைப்புகளாக விடப்படவில்லை.

கிறிஸ்தவ யுகத்தின் ஆரம்பத்தில், கொலோசே ஒரு குறிப்பிடமுடியாத பட்டணமாயிற்று, அது லவோதிக்கேயா மற்றும் ஹயாரோபோலியால் மேற்கொள்ளப்பட்டது. பூகோள ஆசிரியராகிய ஸ்ட்ராபோ, ஏறத்தாழ கிறிஸ்துவின் காலத்தில் எழுதும்போது, அப்பட்டணத்தை “சிறிய நகரம்” என்றார்.[16]

கொலோசெ கலாச்சார ரீதியாகவும் மதரீதியாகவும் பல வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. கிழக்குக்கும் மேற்குக்குமாக இடைப்பட்ட பிரதான வியாபார வழித்தடங்களின் மேல் அமைந்திருந்ததால், அது மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய கலாச்சார தத்துவங்களுக்கு இடமளித்தது. ஆசியா மற்றும் பிரிகியாவிலிருந்த யூதர்கள் (கொலோசெயையும் சேர்ந்தவர்களாயிருந்திருக்கலாம்) எருசலேமுக்கு பெந்தெகொஸ்தே நாளில் வந்திருந்தார்கள் (நடபடிகள் 2:9, 10). எனவே, கொலோசெ பட்டணத்தில் இருந்த சபை யூதமார்க்கத்திலிருந்து மனமாற்றப்பட்டவர்களையும் கொண்டிருந்தது என பத்திரமாக யூகிக்க முடியும். கொலோசெயர் 2:16ல் யூதர்களின் ஆசாரங்களைக் குறித்து உறுதிப்படுத்தும் பவுலின் வார்த்தைகள் இந்த முடிவைக் கொடுக்கிறது.

சைபல் எனும் அஞ்ஞான தேவதை வணக்கம் லைக்கஸ் பள்ளத்தாக்கிலும் அநேகமாக கொலோசெயிலும் ஆழமான ஆசரிப்பு ஸ்தலமாகியிருந்திருக்கலாம். கொலோசெயின் நாணயங்கள் (கி.மு. 27 முதல் - கி.பி. 180 வரையிலான)[17] ரோம அரசின் காலக்கட்டத்தில் இசிஸ், சராப்பிஸ், ஹேலியாஸ், டிமீட்டர், சலேன், எபேசுவிலிருந்த ஆர்ட்டமிஸ், மற்றும் பிரிகியாவின் மனுஷ (ஆண்) தெய்வம் ஆகியவற்றை வணங்கினார்கள் என்பதைக் காட்டுகிறது. மன மாற்றப்பட்டவர்களின் அநேகரும் அஞ்ஞான வழிபாட்டிலிருந்து மாறின கிறிஸ்தவர்களே (கொலோசெயர் 1:21). கொலோசெயரில் சிலருடைய பெயர்கள் சில அஞ்ஞான பின்னணியுடையவர்கள் கிறிஸ்தவர்களானார்கள் என்பதற்கு ஒரு பலமான ஆதாரத்தைக் கொடுக்கிறது.[18]

இன்று கொலோசெ மறக்கப்பட்டு ஒரு மண்மேடாக துருக்கி பகுதியில் காணுகிறது. இந்த நாள் வரைக்கும், அது தோண்டி எடுக்கப்பட்டு கண்டுபிடிக்கப் படவில்லை. அந்த மண் மேட்டிலிருந்து சுமார் மூன்று மைல்

வடமேற்கில் காணப்படுவது ஒரு ஹானஸ் எனப் பெயரிடப்பட்ட கிராமம், அது எஸ்கிசெரிலிருந்து டெனிஸ்லி செல்லும் பாதையில் சற்று தொலைவில் அமைந்துள்ளது.

## மார்க்க விரோத கொள்ளையின் பிரச்சனை

கொலோசே நிருபம் ஒரு வன்மையான செய்தியையும் கொண்டுள்ளது. ஆகிலும் கொலோசெ பட்டணத்து சபையில் என்ன பிரச்சனை நடந்தது என்பது உறுதிபடுத்தப்படவில்லை. எதுவும் குறிப்பான தவறுகள் படிப்படியாக சபையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததா, அல்லது கள்ளப்போதகம் எதுவும் பொதுவாக நுழைவதற்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதை அறிந்து பவுல் அதற்கு எதிராக எச்சரிக்கை கொடுத்தாரா?

கொலோசெயில் இருந்த சபை ஒப்புக்கொடுத்த வளருகிற சபையாக இருந்ததாகக் குறிப்பிட்டார். அவர் சபையார்களை "பரிசுத்தவான்களும்" "விசுவாசிகளும்" என்று குறிப்பிட்டார் (1:2). கிறிஸ்துவின் மேல் அவர்கள் கொண்டிருந்த விசுவாசமும் பரிசுத்தவான்களிடத்தில் காட்டிய அவர்களுடைய அன்பும் எங்கும் அறிவிக்கப்பட்டிருந்தது (1:4). கொலோசெயர்கள் கனிகொடுத்துக்கொண்டிருந்தனர் (1:6). அவர்கள் இராஜ்யத்திற்குள் இருந்தனர் (1:13), தேவனோடு ஒப்புரவாகியிருந்தனர் (1:22). அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (2:12) கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டும் இருந்தனர் (2:13). அவர்கள் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறவர்களாய் இருந்தார்கள் (3:3), தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் பிரியருமாய் (3:12), ஒரே சரீரத்திற்குள் இருக்கிறவர்களுமாயிருந்தார்கள் (3:15). அவர்கள் எவ்வித ஒழுக்கக் கேடான காரியங்களிலோ உபதேச பிழையுள்ளவர்களாகவோ இருந்ததாக பவுல் குறிப்பிடவில்லை.

எப்பாப்பிரா சபையின் நிலையைக் குறித்த செய்தியை பவுலினிடம் கொண்டு வந்தான் (1:7, 8). அவன் நல்ல செய்தியை கொண்டு வந்திருந்த போதிலும், அவர்களுடைய சிந்தனைகளிலிருந்த பிரச்சனைகளையும் குறிப்பிட்டிருந்தான். இந்த சகோதர சகோதரிகள் ஒருவேளை இன்னும் சத்தியத்தை விட்டு விலகிப் போகாமல் இருந்திருக்கலாம், ஆகிலும் பவுல் குறைந்த பட்சம் அவர்கள் கொள்ளையாகி போய்விடாதபடிக்கு சிலவற்றை தவிர்க்குமாறு எச்சரித்தார்.

தமது நிருபத்தின் ஒரு சிறிய பகுதியில் சுவிசேஷத்தை விட்டு விலகிப் போய் விடாதபடிக்கு எச்சரிப்பு குரலை பவுல் எழுப்பினார் (2:4-23). இந்த எச்சரிப்புகள் குறிப்பான சில கைக்கொள்ளும் முறைமைகளுக்கு எதிராகக் குறிப்பிட்டிருந்தாலும், அங்கு அப்படிப்பட்ட பிரச்சனைகள் எதுவும் இருந்ததாக யாரும் தனக்கு தெரிவித்ததாக பவுல் குறிப்பிடவில்லை. அவர்கள் கிறிஸ்துவை தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கும்படி ஊக்கப்படுத்தப்பட்டிருக்கலாம், ஏனெனில் அவர்களுடைய கலாச்சாரம் அவர்களுக்கு ஒரு பலமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

*(1) ஆத்தும அறிவைக்குறித்த பதிலைக் கொடுக்கும்படி பவுல் இந்த நிருபத்தை ஒருவேளை எழுதியிருக்கலாம்.* ஒரு காலக்கட்டத்திற்கு, ஆத்தும அறிவு சார்ந்த உபதேசங்களைப் பவுல் கூறிக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்டது. ஆகிலும் இந்தக் கருத்து அநேக விளக்கவுரையாளர்களால்

கைவிடப்பட்டது. ஆத்தும அறிவுக் கொள்கைகள் இரண்டாம் நூற்றாண்டுவரை பெருகவில்லை. இந்த உபதேசங்களின் முக்கிய நோக்கங்களைக் குறித்து பீட்டர் டூன் பின்வருமாறு விளக்குகிறார்:

> உண்மையான தேவன் தூய ஒளியில் வாசம் பண்ணுகிற தூய ஆவியாயிருக்கிறார், முற்றிலும் இருள் உலகத்திலிருந்து விலகியிருக்கிறார். இந்த உலகம் கருப்பொருளால் உண்டாயிருக்கிறது, ஆதலால் அது தீமை நிறைந்ததாயிருக்கிறது, ஏனெனில் கருப்பொருள் தீமையானது. உண்மையான தேவன் இந்த விஷயத்தில் செயல்படுத்த எதுவுமில்லை, ஏனெனில் இது பலக்குறைவான தேவர்களால் உண்டாக்கப்பட்டது எனவே தவறானவைகளாயுள்ளன. இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் வழக்கமாக சரீரத்தையும் மனதையும் உடையவர்களாக உண்டாக்கப்பட்டுள்ளனர், ஆனால் ஒரு சிலருக்குள்ளாகமட்டுமே தூய்மையான ஆவியின் தீப்பொறி கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட "ஆவிக்குரிய" ஜனங்கள் இந்தத் தீமையான உலகத்திலிருந்து மீட்கப்பட வேண்டும்; இப்படியாக, இரட்சகர் ஒருவர் தேவைப்பட்டார், சுத்த ஆவியாகிய இயேசு, அவர் சரிரம் மற்றும் சிந்தையாகக் காணப்பட்டாலும், இந்த இரட்சகர் அவர் வெளிச்சமாகிய உண்மை தேவனிடத்திலிருந்து அறிவைக் (ஆத்தும அறிவைக்) கொண்டு வருவார் அது ஆவிக்குரிய ரீதியில் வெளிச்சமாயிருக்கும். ஆகையால், ஆவியின் தீப்பொறியைப் பெற்றிருக்கிறவர்கள் அந்த அறிவைப் பெற்று உண்மையான தேவனிடத்திற்கு திரும்புவார்கள்.[19]

ஆத்தும அறிவு கொள்கைக்காரர்கள் இந்தப் கருப்பொருள் உலகம் முழுக்க முழுக்க தீமைநிறைந்தது ஆகையால் முற்றிலும் ஆவி உலகத்திலிருந்து பிரிந்து உள்ளது என்றும் நம்புகின்றனர். இதன் விளைவாக மனமும் உடலும் இரு வேறானது என்னும் கொள்கை உருவானது, அது கருப் பொருள் நன்மை மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்கு எதிரானவை எனும் தத்துவ சமயக் கோட்பாடு தோன்றியது. இந்தக் தத்துவத்தின் படி, (முற்றிலும் நல்லவரான) தேவன் (தீமையான) கருப் பொருளை உண்டாக்கியிருக்க மாட்டார். ஆத்துமா அறிவு வாதிகள் பிற தேவர்களெல்லாம் பிரதான தேவனுக்கு கீழானவர்களும், கீழ்நோக்கி திருகி செல்லுகிறவைகளுமாயிருக்கின்றன, இந்த கீழான தேவர்களில் ஒருவன் தான் இந்த உலகத்தை உண்டாக்கியிருக்கிறான். பிற ஆவிகளுடன் உதவியோடு மனிதவர்க்க ஆத்துமா உலக கருப் பொருளின் நிலையில் சிறைபிடிக்கப்பட்டு உள்ளன, அதிலிருந்து தப்பித்து ஆவிக்குரிய நிலையில் வர அவைகள் ஆவலாயிருக்கின்றன. கருப்பொருள் நிலையிலிருந்து விடுபட வேண்டிய அவசியத்தையும் ஆவிக்குரிய தீப்பொறியை அடைய வேண்டிய அவசியத்தையும் எல்லோருமே கொண்டிருப்பதாக நம்பப்படுவதில்லை. உண்மையான அறிவைப் பெற்றவர்கள் மட்டுமே மரணத்தின்போது கருப்பொருள் நிலையை விட்டு ஆவிக்குரிய நிலையை அடைகின்றன.

ஆத்தும அறிவுக் கொள்கை வாதிகள் இயேசு என ஒருவர் இருந்ததையும், அவருடைய வரலாற்று இடம் பெற்ற மரணத்தையும், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலையும் கூட மறுதலிக்கின்றனர். அவர்களுடைய மனதை

பொறுத்த மட்டில், இரட்சிப்பு என்பது பாவத்திலிருந்து விடுபடுகிற இரட்சிப்பு என்று பொருளல்ல, மாறாக மாமிச நிலையிலிருந்து விடுதலை பெறுவது என்கிற பொருள் அவர்களுடைய மனதில் இருக்கிறது.

*(2) பவுல் ஒருவேளை எசெனஸ் கொள்கைக்காரர்களின் போதனைகளை குறிப்பிட்டிருக்கலாம்.* J. B. Lightfoot இந்த எசெனஸ் உபதேசத்திற்கு உதாரணமாக ஒரு காரியத்தை கொலோசெயர் நிருபத்தைப் பற்றிய தமது விளக்கவுரையில் முன் வைத்தார், அது ஒரு யூத பிரிவு மூலம் மார்க்கத்திற்கு எதிரான ஒரு பெரிய உபதேசம் கொலோசெ சபைக்குள் நுழைந்திருந்தது.[20] கொலோசெயர் புத்தகத்திற்கும் எசெனஸ்க்கும் இடையேயான ஒற்றுமைகளை குறிப்பிட்டபின், டொனால்டு குத்ரி, "லைட்ஃபூட்டின் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் மார்க்கத்திற்கு விரோதமான போதனையைக் குறித்த கேள்வி எசேனஸத்திற்கு ஒப்பாக இருக்கிறது அது இரண்டாம் நூற்றாண்டு ஆத்தும அறிவு கோட்பாட்டைவிட அருகாமையில் இருக்கிறது" என்றார்.[21]

*(3) கொலோசெயர்கள் இயேசுவைக் குறித்த கள்ளப் போதனையால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும்.* பவுல் இயேசுவின் தன்மையை வலியுறுத்தினார். அவர் தேவனுடைய தற்சுரூபமாய் இருப்பது மாத்திரமல்ல (1:15), அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவருமாவார் (1:16, 17). அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், அவரே சபைக்குத் தலையாயிருக்கிறார், அவருக்குள் சகல பரிபூரணமும் உண்டாயிருக்கிறது (1:18, 19). தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கிறது (2:9).

*(4) சில கிறிஸ்தவர்கள் தத்துவத்துக்கு மாறியிருக்கலாம் (2:8).* பவுல் கொலோசெயருக்கு உறுதியளித்து இயேசுவுக்கு அப்பால் ஒரு போதனையோ அல்லது போதகரோ அவர்களுக்குத் தேவையில்லை என்று சொன்னார். அவருக்குள், கிறிஸ்தவர்களெல்லாம் பூரணமடைகிறார்கள் (2:10).

*(5) சிலர் யூதருடைய சிந்தனைகளால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.* அப்படியிருந்திருக்குமானால், அவர்கள், பாவமன்னிப்பு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் வருகிறது என்று போதித்திருப்பார்கள். பவுலின் போதனை இயேசு அவர்களை பாவத்திலிருந்து விடுதலையாக்கி நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைக் குலைத்துப்போட்டார் என்பதுதான் (2:12-16) இது யூதர்களின் போதனைக்கு மறு உத்தரவாக இருந்தது.

*(6) யூதமதத்தைக் சார்ந்த சிலரின் போதனைகளால் சிலர் இழுப்புண்டு, தேவதூதர்களை தொழுது கொண்டு இருந்திருக்கலாம் (2:18).* F. F. Bruce என்பவர் பிரிகியா பகுதியில் யூதர்கள் தேவதூதர்களைக் குறித்து கொண்டிருந்த எண்ணங்களை விவாதிக்கிறார்:

> (தேவ தூதர்கள்) தேவனுக்கும் மனுஷனுக்குமிடையேயான தொடர்பு முறையைக் கட்டுப்படுத்தின படியால், தேவனிடத்திலிருந்து மனுஷருக்கு வருகிற, எல்லா வெளிப்பாடுகளும் மனுஷனிடத்திலிருந்து தேவனிடத்தில் செல்லுகிற அனைத்து ஜெபங்களும் தொழுகைகளும் அதன் இலக்கையடைய அவர்களுடைய மத்தியஸ்த்தாலும் அவர்களின் அனுமதியின் பேரிலும் மட்டுமே நடந்தேறும். ஆதலால் அவர்களுடைய

நல்லெண்ணங்களை ஞானமாய் சிந்தித்து அவர்கள் விரும்புகிற வழிபாட்டை அவர்களுக்குச் செலுத்த வேண்டும்.[22]

இதற்கப்பால், தேவன் தேவதூதர்களை முகவர்களாகக் கொண்டு நியாயப்பிரமாணத்தைக் கொடுக்க பயன்படுத்தினார் என்று போதித்தார். இந்தக் காரணத்தால், நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுதல் என்பது அவர்களுக்கு மதிப்பு செலுத்துவதும் நியாயப்பிரமாணத்தை மீறுவது என்பது அவர்களுக்குப் பிரியமற்றதுமான செயல். இந்த உபதேசத்தின்படி, அவர்கள் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதாலும் சரீர ஒடுக்கத்தை கைக்கொள்வதாலும் தேவ தூதர்கள் சாந்தப்படுத்தப்படுவார்கள், என்று போதித்தனர்.

*(7) சிலர் வாழ்வை கருப் பொருள் கண்ணோட்டத்தில் ஏற்றுக் கொண்டிருந்திருக்கலாம்.* இதுதான் அவர்களுடைய அணுகுமுறையாக இருந்திருக்குமானால், பிறகு பவுல் அவைகள் “உலக வழிபாடுகள்” எனும் பதத்தால் எழுதியிருப்பது சரியே (2:8). சிலர் அஞ்ஞான வழிபாடுகளிலிருந்து வந்தவர்கள் (இதில் பாலுணர்வு சடங்காச்சாரங்களையும் உள்ளிட்டது). அஞ்ஞானமத ஒழுக்க சம்பந்தப்பட்ட சத்துவங்கள் எந்தவொரு ஸ்திரமான உலகத்தோடும் போராடத்தக்க அளவீட்டை முன் வைக்கவில்லை. இதுவே 3:3-9ல் பவுலின் அக்கறையாக இருந்திருக்க வேண்டும்.

*(8) பவுல் அநேகமாக சமயத்தத்துவத்திற்கு முரணான பிரச்சனைகளைக் குறித்து எழுதியிருக்கலாம்,* அதாவது, யூதர்களின் இறைமைப் பண்பு எனும் கொள்கைப்படி காணும் பலதரப்பட்ட விசுவாசங்கள் அல்லது நம்பிக்கைகள் மார்க்க உபதேசங்கள் ஆகியவற்றுடன் அதன் தத்துவங்களையும் அஞ்ஞான இரகசியங்களையும் கலந்து கொண்டிருப்பது. கிளின்டன் E. அர்னால்டு பிரச்சனை இதுதான் என்ற முடிவைக் கொடுக்கிறார்:

> கொலோசெயர் நிருபம் அப்போஸ்தலர் சபை நலனுக்கு ஆபத்து என்று கண்டவைகளையும் கிறிஸ்துவின் நபர்த்துவத்துக்கும் பங்கம் விளைவிக்கும் கருத்துக்களையும் கொண்ட மிரட்டலினிமித்தம் எழுதப்பட்டது. சமயத்திற்கு முரணாண “தத்துவம்” கொலோசெயர்களை மயக்கி இழுக்கும் சக்தியாகும், ஏனெனில் அது (பூமிக்குக் கீழே இருக்கிற) பாதாள ஆவிகளின் ஆபத்தை விளைவிக்கிற தாக்கத்தை உணராதிருக்கச் செய்கிறதற்காக கூடுதல் முயற்சிகளை முன்வைக்கும் காரியம், அவைகள் (வானமண்டலங்களிலுள்ள இயற்கைக்கு மேற்பட்ட) வல்லமைகள், மற்றும் அனைத்துவித பொல்லாத ஆவிகளையும் உட்படுத்தியவை.[23]

மார்க்கத்துக்கு எதிரான கொள்கையைப் பற்றி நமக்கு உறுதியாக எதுவும் தெரியாவிட்டாலும், அப்படி எதுவும் கொலோசெ பட்டணத்து சபையில் நுழைந்திருந்தால், பவுலின் நிருபம் மேலே குறிப்பிடப்பட்ட எந்தப் பிரச்சனையையும் சரிப்படுத்த போதிய போதனையைக் கொடுத்துள்ளது.

## நோக்கமும் முக்கிய கருத்துக்களும்

**நோக்கம்**

கெலோசெயிலிருந்த மார்க்க முரண்பாடுகளில் ஒன்றை

ஒருவர் எப்படிப்பார்க்கிறாரோ அதைப் பொறுத்தே இந்த நிருபத்தின் நோக்கம் தெரியவரும். மார்க்க எதிர்ப்பு கொலோசெ சபையில் எழும்பியிருக்குமானால், பிறகு பவுல் இந்த நிருபத்தை அவர்களை எச்சரித்து கிறிஸ்துவுக்குள் விசுவாசத்துடன் நிலைத்திருக்கும்படி எழுதினார். இன்னும் மார்க்க எதிர்ப்புத் தத்துவங்கள் எழும்பாதிருக்குமேயானால், அவர்கள் கிறிஸ்துவை விட்டு வழுவிப் போகாதபடிக்கு எச்சரித்து அவரே கிறிஸ்தவர்களாகிய எல்லார் மேலும் அவர்களின் எல்லாத்தேவைகளுக்கும் போதியவராயிருக்கிறார் என்று உறுதியாளிக்கும்படியும் எழுதினார்.

இயேசுவிடமிருந்து அவர்களை அப்புறப்படுத்துகிற எந்த கள்ளப் போதனையையும் தவிர்க்கும்படி பவுல் விரும்பினார். சபை இளமைப் பிராயத்தில் இருந்தது. அங்கத்தினர்கள் சந்திக்கிற ஆபத்துக்களையும் எதிர்கொள்ள ஏதுவாக அவர்கள் எச்சரிக்கப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. அவர்கள் சந்தோஷமாய் இயேசுவை கர்த்தராக ஏற்றுக் கொண்டு விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தின் பாதையில் இருந்தது தெளிவாகத் தெரிந்தது; ஆகிலும், ஆபத்துக்கள் முன்பாகக் காத்துக் கொண்டிருந்தன. இயேசுவின் போதனைகளுக்கு மேல் சிலவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களை சம்மதிக்க வைக்க சிலர் முயற்சித்திருக்கக் கூடும். அங்கத்தினர்கள் இயேசு தெய்வீகத்திற்குக் குறைவானவர் என்று சொல்லத் துவங்கியிருக்கலாம். வேறுசில விழும்படி தோண்டப்பட்ட குழிகளான கருப்பொருள் வாதம், ஒழுக்கக்கேடுகள், அல்லது ஆவிக்குரிய குறைபாடுகள் ஆகியவை உள்ளடங்கக்கூடும்.

கிறிஸ்துவின் முதன்மைத்துவத்தை வலியுறுத்துவதே பவுலின் நோக்கமாயிருந்தது. அவரிடத்திலிருந்து வராத எந்த போதனையும் அழிவுக்கு உட்படுத்துவது. அவர் முற்றிலும் தெய்வீகம் நிறைந்தவரும் கிறிஸ்தவனின் தேவையை முழுமையாய் கொடுக்கிறவருமாயிருக்கிறார். இந்தக் காரணத்தால், பவுல் அவர்களை எச்சரித்து அவர்கள் விட்டு வந்த யூதர்கள் கைக்கொள்ளும் முறைமைகளாலும் அஞ்ஞான கலாச்சாரங்களாலோ அல்லது கிரேக்கத் தத்துவங்களாலும் மேற்கொள்ளப்படாதபடிக்கு எழுதினார். உலக வழக்கத்தின்படியான ஒழுக்கமற்ற செயல்களுக்கு மரித்தவர்களாகவும் பரலோகக் காரியங்களுக்கு ஜீவிப்பவர்களாகவும் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்கப்படுத்தினார். அவர்களுக்காக அவர் நிர்ணயித்திருந்த இலக்கினிமித்தம் அதிலே அவர்கள் கவனம் செலுத்தி மேலானவைகளை நாடவும் தங்களுடைய வீட்டுக் காரியங்களை விசுவாசத்தோடே நிறைவேற்றவும் உற்சாகப்படுத்தினார்.

கிறிஸ்துவைப் பின்பற்றவும் வேறெந்த முறைமைகளையும் தவிர்க்கவும் அவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு, இந்த நிருபம் ஒரு பாதுகாப்பு கவசமாக அனுப்பப்பட்டது. பவுல் அவர்களுக்கு அறைகூவலாக கிறிஸ்துவினிமித்தம் உண்மையாய் நிலைத்திருக்கவும் அவபக்தி நிறைந்த தத்துவங்களையும், பாரம்பரியங்களையும், தங்களுடைய காலாச்சாரங்களை கைக்கொள்வதையும் தவிர்க்கும்படி எழுதினார்.

### பெரிய கருத்துக்கள்

கொலோசெயர் புத்தகம், ஒரு சிறிய புத்தகமாக இருந்த போதிலும்,

திருமறையின் அநேக முக்கியமான கருத்துக்களை கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் இல்லாத மிகக் குறைவானவைகளை கொண்டுள்ளது. எண்ணற்ற உபதேச, ஒழுக்க, மற்றும் சமுதாய பிரச்சனைகள் கொலோசெயில் இருந்த உள்ளூர் சபையை எதிர்கொள்ள செய்ததுடன் அடுத்து வந்த கிறிஸ்தவ சந்ததியையையும் வாதித்தவைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தக் கண்ணோட்டத்தில் ஐந்து பெரியக் கருத்துக்கள் இந்த புத்தகத்தை ஆக்கிரமித்துள்ளன.

(1) *பவுலும் சகோதரர்களும்.* பவுல் தன்னுடன் பயணம் பண்ணின அநேகரை கொலோசே நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்: தீமோத்தேயு, எப்பாப்பிரா, அரிஸ்தர்க்கு, மாற்கு, பர்னபா, யுஸ்து, லூக்கா, மற்றும் தேமா (1:1; 4:10-14). அவர் தன்னுடைய அன்பை இயேசுவைப் பின்பற்றுவோரிடம் வெளிப்படுத்தினார் அதேபோல தனது அக்கறையையும் பாசத்தையும் தன்னோடிருந்தவர்களிடம் காண்பித்தார்.

பவுல் தனக்குத் தெரிந்த ஜனங்களில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை, தான் பார்த்தேயிராத சகக் கிறிஸ்தவர்களுக்கும் தான் கடமைப்பட்டவர் என்றும் உணர்ந்தார். அவர் தொடர்ந்து கொலோசெ கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்தார் மேலும் அவர்களுக்குள் ஆவிக்குரிய வளர்ச்சியையும் ஊக்கமான பக்தியையும் கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்த வகை தேடினார் (1:1-14). அவர் எல்லா விசுவாசிகளையும் வளரச் செய்து உறுதிப்படுத்தவும் இயேசுவுக்குள் தேவனுடைய இரகசியங்களை பகிர்ந்து கொள்ளவும் கூடிய நம்பிக்கையினிமித்தம் அவர் கஷ்டங்களைச் சகித்தார் (1:24-29).

(2) *உயர்த்தப்பட்ட கிறிஸ்து.* பவுலின் கூற்றுப்படி, எல்லா உண்மையான உபதேசங்களுக்கும் அடிப்படை, இயேசுவின் மகத்துவமும் அதிகாரமுமே. அவர் தேவனுடைய சாயலைக் கொண்டிருக்கிறார், அவர் தான் சிருஷ்டிகர், எல்லாவற்றின் மேலும் ஆளுகை செய்கிறவர், சபைக்குத் தலையாகவும் இருக்கிறார் (1:15-18). சிலுவையிலே சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் மூலம், தேவனோடு ஒப்புரவாகுதலை சாத்தியமாக்கினார் (1:20-23). உண்மையான சகல ஞானமும் அறிவும் (2:3) தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் (அவருக்குள்) கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (2:9, 10).

கொலோசெயர்கள் மனித ஞானத்துக்கும் போதனைக்கும் திரும்பிவிடக் கூடாது என்பதற்காக அவர்களை எச்சரிக்கும்படி இயேசுவைக் குறித்த இந்த உண்மைகளை பவுல் குறிப்பிட்டார். அவர்கள் மனிதத் தத்துவங்களையும் கட்டளைகளையும் அல்லது மத இரகசியங்களை கைக்கொள்ளுதலுமாகிய காரியங்களில் அவர்களைப் பின்பற்றி, தங்களுக்குரிய பலன் கொள்ளைபோய் விடாதபடிக்கு, அவர்கள் இயேசுவிலே உறுதியாய் தரித்திருந்து, அவரைப் பற்றிக் கொண்டிருக்க போதிக்கப்பட்டனர் (2:4-8, 18-23). நியாயப்பிரமாணம் இயேசுவின் சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டு விட்டதால், அதுவும் அவர்களுடைய ஜீவனுக்கான வழிகாட்டியல்ல (2:14-17).

(3) *கிறிஸ்துவுக்குள் புதிதானவர்கள்.* கிறிஸ்து சகலத்திலும் போதுமானவராயிருப்பதால், கொலோசெயர்கள் அவருக்குள் அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடே கூட ஞானஸ்நானத்திலே எழுப்பப் பட்டவர்களாயும் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாயும்

இருப்பதால் புதிதாக்கப்பட்டவர்களானார்கள் (2:11-13). அவர்கள் இயேசுவுடன் தங்களை உட்படுத்தின சம்பவம் அவர்களுடைய வாழ்க்கையை மாற்றும் சக்தியுடையதாயிருந்தது. அவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்திருந்தார்கள் (2:20), மேலும் அவரோடே கூட எழுந்துமிருந்தார்கள் (3:1-3). இதனிமித்தம், அவர்களின் ஜீவியத்தின் திசையும் நோக்கமும் மாற்றம் பெறவேண்டியதாயிருந்தது. அவர்களுடைய வாழ்க்கையின் அணுகுமுறை வித்தியாசமாயிருக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் ஒழுக்கமற்ற செயல்களுக்கு முடிவையுண்டாக்கி அவபக்தியுள்ள காரியங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர் (3:5-9). இயேசுவிலே காணப்படும் சகல ஒழுக்கக் காரியங்களையும் தங்களுக்குள் அபிவிருத்தி பண்ண வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:10-14). அதன் விளைவு ஒரே சரீரத்திற்குள்ளாக உண்டாகும் ஐக்கியம் (3:15).

கிறிஸ்துவுக்குள் மகத்தான ஆசீர்வாதங்களைப் பெற்ற கொலோசெயர்கள், தங்களுடைய இருதயத்துடன் தோன்றும் பாடல்களினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருந்தனர் (3:16). அவர்கள் தங்களுடைய வார்த்தைகளினால் மாத்திரமல்ல, அவர்களுடைய செயல்களாலும் - கிறிஸ்துவுக்குப் பிரியமாயிருக்க வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:17).

(4) *வீட்டுக்காரியங்களில் அக்கறை.* மற்றவர்களோடு உண்டாகும் உறவுமுறைகள் இயேசுவின் நோக்கங்களால் வழிநடத்தப்பட வேண்டும். குடும்பத்தில் புருஷர்கள் தலையாயிருக்க வேண்டியவர்கள், மனைவிகள் தங்களுடைய புருஷர்களோடு ஒத்துழைக்க வேண்டியவர்கள், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கவும், எஜமானர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுக்கு செய்ய வேண்டிய நீதியும் செவ்வையுமானதைச் செய்ய வேண்டும் (3:18-4:1).

(5) *கிறிஸ்துவுக்குள் மன்னிப்பு.* 1:14ல் பவுல் பாவமன்னிப்பை அறிமுகப்படுத்தினார் அந்த பாவ மன்னிப்பிற்குள் பிரவேசிப்பதை 2:11-13ல் சொல்லுகிறார். ஏவப்பட்ட இரண்டு (வேதாகம புத்தக) ஆசிரியர்களான, மாற்கையும் லூக்காவையும் குறிப்பிடுகிறார் (4:10, 14). அவர்கள் சுவிசேஷப் புத்தகங்களை எழுதினவர்கள். அவர்களுடைய எழுத்துக்கள் இயேசுவின் போதனைகளையும் இந்த பெரிதான கருத்தையுடைய ஆதிசபையைக் குறித்தும் குறிப்பிட்டது.

கொலோசெயரை ஜாக்கிரதையுடன் படிக்கும் போது, கிறிஸ்தவர்கள் இயேசுவைக் குறித்த ஆழமான புரிந்து கொள்ளுதலைப்பெற்று அவரைப் பின்பற்ற ஏதுவான செயலூக்கத்தைப் பெறுகின்றனர். அவர் யார் என்ற அடிப்படையிலும் அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்ற அடிப்படையிலும் அவருக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும் அதினாலே நாம் இம்மையிலும் மகிழ்ச்சியும் பயனுள்ளதுமான வாழ்வைப் பெற்றிடுவோம் அதன் மூலம் பரலோகத்திலும் அவரோடு கூட வாழுவோம்.

## வரை குறிப்பு

I. *வாழ்த்துரை (1:1, 2)*

A. *பவுலிடத்திலிருந்தும் தீமோத்தேயுவிடமிருந்தும் (1:1)*
B. *விசுவாசமுள்ள கொலோசெ சகோதரர்களுக்கு (1:2)*

II. *கொலோசெயருக்காக பவுல் நன்றி செலுத்துதல் (1:3-8)*
A. *நன்றி செலுத்தும் ஓர் ஜெபம் (1:3)*
B. *அவர்களுடைய விசுவாசமும் அன்பும் (1:4)*
C. *அவர்களுடைய பரலோக நம்பிக்கை (1:5)*
D. *அவர்களுடைய விசுவாசத்தினாலுண்டாகும் கனி (1:6)*
E. *எப்பாப்பிராவின் அறிக்கை (1:7, 8)*

III. *கொலோசெயருக்காக பவுலின் ஜெபம் (1:9-14)*
A. *அவர்களுடைய அறிவும் ஆவிக்குரிய ஞானமும் (1:9)*
B. *அவர்களுடைய கிறிஸ்தவ நடக்கையும் கனி கொடுத்தலும் (1:10)*
C. *அவர்களுடைய ஆவிக்குரிய பெலம் (1:11, 12)*
D. *ஒளியின் ராஜ்யத்திற்குள் அவர்களுடைய பிரவேசித்தல் (1:12ஆ, 13)*
E. *கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய மற்றும் நம்முடைய மன்னிப்பு (1:14)*

IV. *கிறிஸ்துவின் மகத்துவத்தைக் குறித்த விளக்கம் (1:15-20)*
A. *அதரிசனமான தேவனுடைய தற்சூருபமும் எல்லாவற்றிலும் முந்தின பேறுமானவர் (1:15)*
B. *சகலத்தையும் சிருஷ்டித்தவர் (1:16)*
C. *எல்லாவற்றையும் ஒன்றாக வைத்திருப்பவர் (1:17)*
D. *சபைக்கு தலையானவரும் மிக மேன்மையானவரும் (1:18, 19)*
1. *சபைக்குத் தலையானவர் (1:18)*
2. *சிருஷ்டிப்பின் மூல ஸ்தலம் (1:18)*
3. *மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் (1:18)*
4. *எல்லாவற்றிற்கும் முந்தினவர் (1:18)*
5. *அவருக்குள் சகல பரிபூரணமும் (1:19)*
E. *ஒப்புரவாகுதலின் அடிப்படை (1:20)*

V. *கிறிஸ்துவின் மூலம் ஒப்புரவாகுதலை பவுல் உறுதிப்படுத்துதல் (1:21-23)*
A. *அவர்களுடைய முந்தின நிலை (1:21)*
B. *கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் அவர்களுடைய ஒப்புரவாகுதல் (1:21)*
C. *அவர்களுக்குத் தேவையான விசுவாசத்தன்மை (1:22, 23)*

VI. *கொலொசெயருக்காக பவுலின் பிரயாசம் (1:24-29)*
A. *அவருடைய சந்தோஷம்: அவர்களினிமித்தம் பாடுகள் (1:24)*
B. *அவர்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம் (1:25-27)*
C. *அவர்களுக்கான அவருடைய இலக்கு: கிறிஸ்துவுக்குள் முழுமை பெறுதல் (1:28, 29)*

VII. *பவுலின் அறிவிப்பு: கிறிஸ்துவே, ஞானத்துக்கும் அறிவுக்குமான மூல ஸ்தலம் (2:1-7)*

A. *அவரது விருப்பம்: தேவனுடைய இரகசியத்தைக் குறித்த அவர்களுடைய முழு புரிந்து கொள்ளுதல் (2:1, 2)*

B. *அவருடைய வெளிப்பாடு: கிறிஸ்துவுக்குள் சகல ஞானமும் அறிவும் (2:3, 4)*

C. *அவருக்குள் பிரியமானது: கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய விசுவாசம் (2:5)*

D. *அவருடைய அறிவுரை: கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே நடந்து கொள்ளுதல் (2:6)*

E. *அவர் அளித்த ஊக்கம்: கிறிஸ்துவுக்குள் கூட்டி கட்டப்படவேண்டும் (2:7)*

VIII. *கிறிஸ்துவின் நிறைவைக் குறித்து பவுலின் காட்சி (2:8-15)*

A. *மனித உபதேசத்தால் கொள்ளை கொண்டு போகப்படாதபடி ஒரு எச்சரிக்கை (2:8)*

B. *கிறிஸ்துவுக்குள் தெய்வீகத்தின் பரிபூரணம் வாசம்பண்ணுதல் (2:9)*

C. *கிறிஸ்துவுக்குள் முழுமை (2:10, 11)*

D. *கிறிஸ்துவுக்குள்ளான பாவமன்னிப்பும் ஜீவியமும் (2:12, 13)*

E. *நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்து விடுதலை (2:14)*

F. *கிறிஸ்துவால் வெளிப்பட்ட எதிர்ப்பு (2:15)*

IX. *தலையைப் பற்றிக் கொண்டிருக்க பவுலின் அறிவுரை (2:16-23)*

A. *நியாயப்பிரமாணத்துக்குப் பதிலாக கிறிஸ்துவை பின்பற்றுதல் (2:16, 17)*

B. *மனித முறைமைகளை தவிர்த்தல் (2:18, 19)*

C. *உலக நியமங்களுக்காக கிறிஸ்துவுடன் மரித்தல் (2:20-23)*

X. *கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைக் குறித்த விளக்கம் (3:1-14)*

A. *மேலானவைகளைத் தேடுதல் (3:1-4)*

B. *கடந்த கால அசுத்தங்களை கொன்று போடுதல் (3:5-7)*

C. *அவபக்தியுள்ள நடத்தைகளை களைந்து போடுதல் (3:8, 9)*

D. *கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாகுதல் (3:10, 11)*

E. *தேவனுடைய தகுதியாம்ஸங்களைத் தரித்துக் கொள்ளுதல் (3:12-14)*

XI. *கிறிஸ்துவுக்கு மறுமொழி (3:15-17)*

A. *அவருடைய சமாதானத்தைப் பெறுதல் (3:15)*

B. *பாடல் மூலம் அவரைத் தொழுது கொள்ளுதல் (3:16)*

C. *எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே செய்யுதல் (3:17)*

XII. *உறவுமுறைகளில் பொறுப்புகள் (3:18-4:1)*

A. *புருஷனிடமிருந்து மனைவிக்கு (3:18)*

B. மனைவியிடமிருந்து புருஷனுக்கு *(3:19)*
C. பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு *(3:20)*
D. பிள்ளைகளிடமிருந்து பெற்றோருக்கு *(3:21)*
E. எஜமானர்களிடமிருந்து வேலைக்காரர்களுக்கு *(3:22-25)*
F. வேலைக்காரர்களிடமிருந்து எஜமான்களுக்கு *(4:1)*

XIII. இறுதிக் குறிப்புகள் *(4:2-18)*
- A. அறிவுரை *(4:2-6)*
  1. விசேஷமாக, பவுலுக்காக ஜெபித்தல் *(4:2-4)*
  2. புறம்பேயிருப்பவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து கொள்ளுதல் *(4:5, 6)*
- B. உபதேசங்களும் பாராட்டுக்களும் *(4:7-9)*
  1. தீகிக்குவுடன் சம்பந்தப்பட்டது *(4:7, 8)*
  2. ஒநேசிமுவுடன் சம்பந்தப்பட்டது *(4:9)*
- C. வாழ்த்துக்களுடன் முடித்தலும் குறிப்புகளும் *(4:10-18)*
  1. உடன் வேலைக்காரர்களிடமிருந்து வாழ்த்துச் சொல்லுதல் *(4:10-14)*
     a. யூத கிறிஸ்தவர்களிடமிருந்து *(4:10, 11)*
     b. புறஜாதி கிறிஸ்தவர்களிடமிருந்து *(4:12-14)*
  2. சகோதரர்களுக்கு வாழ்த்துக்களும் குறிப்புகளும் *(4:15-17)*
     a. லவோதிக்கேயருக்கும் நிம்பாவுக்கும் *(4:15)*
     b. பவுலின் நிருபத்தை வாசித்தலைக்குறித்து *(4:16)*
     c. அர்கிப்புக்கு *(4:17)*
  3. முடிவுரைக் குறிப்புகள் *(4:18)*

---

குறிப்புகள்

[1]Ernst Theodor Mayerhoff, *Der Brief an die Kolosser, mit vornehmlicher Berucksichtigung der drei Pastoralbriefe, kritisch gepruft* (Berlin: Hermann Schultze, 1838). [2]Henry Clarence Thiessen, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1943), 229-30. [3]Donald Guthrie, *New Testament Introduction,* 3d ed., rev. (Downers Grove, III.: Inter-Varsity Press, 1970), 554. [4]Robert G. Bratcher மற்றும் Eugene A. Nida ஆகியோர் கொலோசெயர் மற்றும் எபேசியருக்கு இடையேயுள்ள தொடர்பை விவாதித்தனர். கொலோசெயருக்கும் ஏதோ ஒரு வகையில் "எபேசியருடன் தொடர்புடையதாயிருக்கிறது. இரண்டு நிருபங்களிலும் உள்ள தெளிவான கருத்து ஒற்றுமைகளுக்கப்பால், பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்ததும் சொல்லப்படுகிறது [எபேசியர் *6:20*] மேலும் பவுல் எப்படியிருக்கிறார் என்று வாசகர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு ஒரே மாதிரியான பொறுப்புக் கட்டளையை தீகிக்கு மூலம் நிருபங்கள் கொடுத்தனுப்பப்பட்டன [எபேசியர் *6:21, 22*]'' (Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon,* Helps for Translators [New york: United Bible Societies, 1977], 1). [5]மேலும் இந்த ஒற்றுமைகளைக் கற்றுக் கொள்ள, காண்க H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon,*

The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 47-49. [6]Curtis Vaughan, *Colossians and Philemon,* Bible Study Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1980), 15. [7]Chrysostom *Colossians* 1. See also Everett Ferguson, *Early Christians Speak* (Abilene, Tex.: Biblical Research Press, 1981), 244; and Ralph P. Martin, *Colossians and Philemon,* New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 217. [8]இந்த தேதிகளைக்குறித்து மேலும் அறிய, *காண்க* Colin J. Hemer, *The Book of Acts in the Setting of Hellenistic History,* ed. Conrad H. Gempf (Winona Lake, Ind.: Eisenbrauns, 1990), 169-71. [9]Pliny *Natural History* 21.51. [10]Tacitus *Annals* 14.27.

[11]E. J. Banks, "Colossae," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:732. [12]Xenophon *Anabasis* 1.2.6. [13]Herodotus *Histories* 7.30. [14]Josephus *Antiquities of the Jews* 12.3.4. [15]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon,* rev. (London: Macmillan & Co., 1916), 20 *காண்க.* [16]Strabo *Geography* 12.8.13. [17]ரோம சாம்ராஜ்யம் கி.மு. *27,* ஜனவரி *16,* அன்று முறையான அமைப்பாகத் துவங்கியது. *காண்க* S. Angus and A. M. Renwick, "Roman Empire" in *The International Standard Bible Encylopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:208. [18]"கொலோசெயரில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் குறைந்த பட்சம் மூன்று பெயர்கள் அஞ்ஞான தெய்வங்களுக்குரிய பெயர்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளன: தீகிக்கு (கிரேக்க மொழியிலிருந்து Gk. *Tuche* விதி), எப்பாப்பிரா (எப்பாபிராதீத்துவுக்கு குறிப்பிடும் சுருக்கப்பெயர் அஃரோடைட்), மற்றும் நிம்பா (... நிம்ஃபாடோரா, நிம்ப்ஃகளின் வரம்)" (David M. Hay, *Colossians,* Abingdon New Testament Commentaries [Nashville: Abingdon Press, 2000], 25). [19]Peter Toon, "Gnosticism," in *The New International Dictionary of the Bible,* ed. Merrill C. Tenney, rev. J. D. Douglas (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 393. [20]Lightfoot, 71-111. *லைட்ஃபூட் எஸெனிஸம் உபதேசத்தை சவக்கடல் சுருளின் அடிப்படையில் தனது வாதத்தை வைக்கவில்லை, இவைகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே அவர் அதை எழுதிவிட்டார்.*

[21]Guthrie, 550. [22]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 167. [23]Clinton E. Arnold, *The Colossian Syncretism* (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 308.

# கொலோசெயர், எபேசியர் மற்றும் கலாத்தியரில் ஒரே போதனைகள்

| | கொலோசெயர் | எபேசியர் | கலாத்தியர் |
|---|---|---|---|
| *1.* கிறிஸ்தவர்கள் உள்ளான மனுஷனில் பலப்படுதல் | *1:11* | *3:16* | |
| *2.* சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் | *1:18; 2:19* | *1:22, 23 4:15; 5:23* | |
| *3.* கிறிஸ்துவின் உயர்வான தன்மை | *1:18* | *1:20-22* | |
| *4.* கிறிஸ்துவின் நிறைவு | *1:19; 2:9* | *1:23; 3:19* | |
| *5.* கிறிஸ்து மூலம் கிறிஸ்தவர்களின் பரிசுத்தம் | *1:21, 22* | *5:25-27* | |
| *6.* கடந்த காலங்களின் இரகசியம்: புறஜாதிகளும் உட்படுத்தப்படுதல் | *1:26, 27; 2:2; 4:3* | *1:9; 3:3-9; 6:19* | |
| *7.* ஞானஸ்நானம் பெற்றவர்கள் விசுவாசத் தினாலே பரிசுத்தமாக்கப்படுதல் | *2:12, 13* | *5:26* | *3:26, 27* |
| *8.* கிறிஸ்துவுடன் ஒரு புதிய ஜீவன் | *2:13; 3:1* | *2:5, 6* | |
| *9.* நியாயப்பிரமாணத்தின் கட்டளைகள் அழிக்கப்படுதல் | *2:14* | *2:14, 15* | *3:24, 25* |
| *10.* விசேஷித்த பண்டிகை நாட்கள் இனியும் தேவையில்லை | *2:16* | *4:10* | |
| *11.* கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு கள்ளப் போதகர்களுக்கு அடிமைகளாகக் கூடாது | *2:18-20* | *4:13-15* | |
| *12.* தலையின் உதவி கொண்டு சரீரத்தை எழும்பிக்கட்டுதல் | *2:19* | *4:16* | |
| *13.* கடந்த கால காரியங்களை களைந்து போட்டு புதிய ஜீவனை தரித்துக் கொள்ளுதல் | *3:8-14* | *4:22-26* | |
| *14.* கிறிஸ்தவர்கள் ஒரே சரீரமாக செயல்படுதல் | *3:15* | *2:16; 4:4* | |
| *15.* பாடுதலைக் குறித்த அறிவுரைகள் | *3:16* | *5:19* | |
| *16.* கணவன், மனைவி, பிள்ளைகள், எஜமானர்கள், மற்றும் வேலைக்காரர்களுக்கான அறிவுரைகள் | *3:18-4:1* | *5:23-6:9* | |